சிசி **146/2018** அசா**.7** அன்புமதி க.பெ அய்யாசாமி தேதி **20.03.2024**

(1, 2, 3, 4, 5 எதிரிகள் ஆஜர் இல்லை. 1, 2, 3, 4, 5 எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 317ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)

(எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 311ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டுள்ளார்)

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

வழக்கு சம்பவம் 05.12.2016 அன்று நடந்ததாக முதல் தகவல் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஆனால் 19.01.2017 அன்றுதான் புகார் அளிக்கப்பட்டு அதன்மீது 27.03.2017 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகார் மனுவில் வரதட்சணை கேட்டு கொடுமைபடுத்தியதாக எதுவும் கூறப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகாரினை நான்தான் பெற்றேன். 1 வது எதிரி 4 வது எதிரியை இரண்டாவது திருமணம் செய்ததற்காக அச்சடிக்கப்பட்டதாக கூறப்படும் திருமண அழைப்பிதழ் தவிர வேறு ஏதேனும் அத்தாட்சி திருமண அழைப்பிதழ் அச்சடிக்கப்பட்டதாக கூறப்படும் அச்சகத்திலிருந்து என்னால் கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை. 05.12.2016 அன்று 1 வது எதிரிக்கும் 4 வது எதிரிக்கும் விழுப்புரத்தில் உள்ள ஒரு தனியார் திருமண மண்டபத்தில் திருமணம் நடந்ததா என்பதை உறுதிபடுத்துவதற்காக மேற்படி திருமண மண்டபத்தின் மேலாளரை விசாரித்து மண்டபம் பதிவு செய்யப்பட்டதற்கான ஆவணங்கள் ஏதேனும் கைப்பற்றினேனா என்றால் 1 வது எதிரியை விசாரித்தபோது அவர் தனக்கு 2 வது திருமணம் நடந்தது என்பதை ஒப்புக்கொண்டார். அதனால் விழுப்புரம் சென்று விசாரணை செய்யவில்லை.

2. 1 வது எதிரி 4 வது எதிரியை இரண்டாவது திருமணம் செய்துகொண்டார் என ஒப்புக்கொள்ளப்பட்டது தொடர்பாக தக்க சாட்சிகள் முன்னிலையில் வாக்குமூலம் எதுவும் நான் பதிவு செய்தேனா என்றால் இல்லை. 1 வது எதிரி இரண்டாவது திருமணம் செய்துகொள்ளவில்லை என்றாலும் உண்மையில் 1 வது எதிரி இரண்டாவது திருமணம் செய்துகொண்டதாக என்னிடம் ஒப்புக்கொண்டிருந்தால் அதுபற்றிய வாக்குமூலத்தை பதிவு செய்திருப்பேன் என்றால் சரியல்ல. 1 வது எதிரியும் அ.சா.1 ராணியும் திருமணத்திற்கு பின்னர் நீண்ட காலமாக சென்னையில் வசித்து வந்தார்கள் என்பதை எனது விசாரணையில் தெரிந்துகொண்டேன். அ.சா.1 ராணியை சென்னையிலிருந்து அவரது தகப்பனார்தான் ஊருக்கு அழைத்து வந்தார் என்பதை எனது விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் அதுபற்றி ஞாபகம் இல்லை.

3. அ.சா.2 செல்வராஜ் என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் 1 வது எதிரி எனது மகளை குழந்தை இல்லை என்று கூறி துன்புறுத்தினார் என்று கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.4 சுப்பிரமணியன் என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் அ.சா.1 ராணியை அவரது கணவரான 1 வது எதிரி ஊருக்கு அழைத்துவந்து அ.சா.1 ராணியின் தகப்பனார் வீட்டில் விட்டுவிட்டார் என கூறியுள்ளார் என்றால் சரிதான். 1 வது எதிரி அ.சா.1 ராணிக்கு எதிராக சென்னை குடும்ப நல நீதிமன்றத்தில் விவாகரத்து கோரி வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்பதை எனது விசாரணையில் தெரிந்துகொண்டேன். அ.சா.1 ராணி 1 வது எதிரி தனக்கு எதிராக சென்னையில் தாக்கல் செய்திருந்த விவாகரத்து வழக்கினை பட்டுக்கோட்டை சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றி உத்தரவிட கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மனுதாக்கல் செய்திருந்தார் என்ற விவரத்தை எனது விசாரணையில் தெரிந்துகொண்டேன்.

4. அ.சா.1 ராணி தன்னுடைய விருப்பத்தின்பேரில் தான்தோன்றி தனமான வாழ்க்கை வாழவேண்டுமென்பதற்காக தனது தகப்பனாரின் தவறான வழிகாட்டுதலின் பேரில் அவரை தனது சுயவிருப்பத்துடன் 1 வது எதிரியை பிரிந்து வாழ்ந்துவந்தார் என்பதால் 1 வது எதிரி பலமுறை பஞ்சாயத்து பேசியும் அ.சா.1 ராணி 1 வது எதிரியுடன் சேர்ந்து வாழ மறுத்ததால் 1 வது எதிரி விவாகரத்து வழக்கு தாக்கல் செய்தார் என்றாலும் அதனால் ஆத்திரமடைந்த அ.சா.1 ராணி எதிரிகளுக்கு எதிராக பொய்யான புகார் அளித்து அதன்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1 வது எதிரி எந்த நபரையும் இரண்டாவது திருமணம் செய்யவில்லை என்றாலும், நான் முறையாக விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது வழக்கினை பதிவு செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

<u>ம.வி.இல்லை</u>